ஹர ஹர சங்கர | உ | ஜய ஜய சங்கர
வேதோ (அ)கிலோ தர்ம மூலம் | ஸ்ரீ மஹா பெரியவா பாதமே சரணம் | வேதோ நித்யம் அதீயதாம்



# ஸ்ரீ வேத வ்யாஸர் ஜயந்தி 2022
# ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேத க்ரம பாராயணம்

**13.07.2022, புதன்கிழமை**

**ஸ்ரீ மஹா பெரியவா பரிபூரண குருவருளுடன்** உலக நன்மைக்காகவும், இயற்கைச் சீற்றங்களால் ஜீவராசிகள் துன்பப்படாமல் தருணத்தில் மழை பொழிந்து எல்லா வளமும் செழிக்கவும் ஸ்ரீ மஹா த்ரிபுர சுந்தரி ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞ பீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன் **ஸ்ரீ வேத வ்யாஸர் ஜயந்தியை (13.07.2022, புதன்கிழமை)** முன்னிட்டு **ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேத க்ரம பாராயணம்** ப்ரஹ்மஸ்ரீ **கோபால கனபாடிகள்** அவர்கள் தலைமையில் திருவையாறு அருகில் உள்ள **அம்மாள் அக்ரஹாரம்** கிராமத்தில் **07.07.2022, வியாழக்கிழமை** முதல் **16.07.2022, சனிக்கிழமை** வரை **10 நாட்கள்** நடைபெறுகிறது. ஆஸ்தீக பெருமக்கள் குரு கைங்கர்யத்தில் கலந்து கொண்டு வாழ்வாங்கு வாழுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வேதத்தின் மகிமை என்ன என்றால் சப்தத்தின் மந்திர சக்தி, அர்த்தத்தின் கௌரவம் என்ற இரண்டும் கொண்ட மந்திர சமூகமாக அது இருப்பதுதான். அதன் சப்தம் நம்முடைய நாடிகளிலும், வெளி லோகத்திலும் ஏற்படுத்தும் சலனங்களால் ஆத்ம க்ஷேமமும், லோக க்ஷேமமும் உண்டாகிறது. லோக க்ஷேமம் என்றால் மநுஷ்யர்களின் க்ஷேமம் மட்டுமில்லை. ஸகல பிராணி வர்க்கங்களும் நன்றாக இருக்கவேண்டும் என்று வேதம் சொல்கிற மாதிரி வேறெந்த மதத்திலும் சொல்லியிருக்க வில்லை. "தே த்விபாத் சதுஷ்பாத்" – இரு கால் பிராணி, நாலுகால் பிராணி எல்லாம் க்ஷேமமாக இருக்க வேதம் ப்ரார்த்திக்கிறது. புல், பூண்டு, விருக்ஷம், மலை, நதி ஆகிய எல்லாவற்றின் நன்மையையும் கோருகிறது. இந்த ஸமஸ்தப் பிராணிகளின் க்ஷேமம் வேதத்தின் சப்த விசேஷத்தாலேயே நடந்து விடுகிறது. வேத சப்தம் பிரகாசிக்க வேண்டும்; வேத அர்த்தம் பிரசாரமாக வேண்டும்; வைதிக அநுஷ்டானங்கள் புது ஜீவனைப் பெற்றுத் திகழவேண்டும். நம்முடைய ஒரு தேசத்திலே இப்படி ஏற்பட்டுவிட்டால் போதும். ஒருத்தனுடைய ஹ்ருதயம் பலமாக இருந்து விட்டால் மற்ற அவயவங்களுக்கு எத்தனை வியாதி வந்தாலும் அவன் பிழைத்துக் கொள்கிற மாதிரி, லோகத்திலுள்ள அத்தனை தேசங்களுமே நல்ல வழிக்கு வந்து, ஸமஸ்த ஜனங்களும் க்ஷேமமாக இருப்பார்கள். வேத தர்மம் பிரார்த்தனை பண்ணுவதும் இதைத்தான்.

ஸம்ஹிதா பாட மாத்ரேண யத் பலம் ப்ரோச்யதே புதை:|
பதேது த்விகுணம் வித்யாத் க்ரமேது ச சதுர்குணம் |
வர்ண க்ரமே சதகுணம் ஜடாயந்து ஸஹஸ்ரகம்|

(ஸம்ஹிதா பாடத்தை விட இருமடங்கு பலன் கொண்டது பத பாடம்; நான்கு மடங்கு பலனளிப்பது க்ரம பாடம்; நூறு மடங்கு பலன் வாய்ந்தது வர்ண க்ரமம் என்ற பாடமுறை ஆயிரம் மடங்கு பலனளிப்பது ஜடா பாடம். லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து !

| | |
|---|---|
| தினமும் காலை 7.15 மணிக்கு | **குருவந்தனம்** |
| காலை 8.00 மணி முதல் 12.00 வரை | **பாராயணம்** |
| மாலை 3.30 முதல் 5.30 வரை | **பாராயணம்** |
| மாலை 6.30 முதல் இரவு 8.00 வரை | **பாராயணம்** |

இப்படிக்கு,

**ஸ்ரீ சரணாகதம் டிரஸ்ட்**

Contact Number : 86675 81170.
Shri Sharanagatham Trust
City Union Bank - SB Account Number : 500101012729466 - IFSC CIUB0000190

Kindly Send your Address details to Shrisaranagatham@gmail.com for sending Prasadam

ஸ்ரீ மஹா கணபதி பிரிண்டர்ஸ், அய்யம்பேட்டை. செல் : 9994262998